## பகுதி - II விடைகள்.

(1) i. சமூகத்தின் எல்லையற்ற விருப்பங்களுடன் ஒப்பிடும்போது நிரம்பல் வரையறுக்கப்பட்ட அல்லது அருமைத்தன்மை கொண்ட வளங்கள் பொருளாதார வளங்களாகும். அதற்கு அமையச் செலவு தோன்றும்.

உதாரணம்: எரிபொருள், உபகரணங்கள், பயிர் செய்யக் கூடிய நிலம் (02 புள்ளிகள்)

இயற்கையினால் இலவசமாக வழங்கப்படுவதும் அமையச் செலவு அற்ற பொருட்கள் சேவைகளின் உற்பத்திக்காக பயன்படுத்தக் கூடிய அருமையற்ற வளங்கள் பொருளாதாரமல்லா வளங்களாகும்.
உதாரணம்: மழைநீர், வளிமண்டலம், சூரிய ஒளி (02 புள்ளிகள்)

ii. 1.சுகாதாரம் மற்றும் போசாக்கு நிலைமைகளை மேம்படுத்தல்

2.புதிய தொழில் நுட்பத்தை அறிமுகப்படுத்தலும் ஊக்குவித்தலும்

3.கல்வியையும் பயிற்சியையும் வழங்கல்

4.நேர் நிலைச் சிந்தனைகளை விதைத்தல்

5.பௌதீக மூலதனத்தை மேம்படுத்தல்

6.அரசாங்கத்தின் ஊக்குவிப்புக்கள். (04 புள்ளிகள்)

iii. 1.வளஒதுக்கீட்டுத் தீர்மானங்களை மேற்கொள்ளல்

2.தொழில் நுட்பத் தெரிவுத் தீர்மானங்களை மேற்கொள்ளல்

3.வருமானப் பங்கீட்டுத் தீர்மானங்களை மேற்கொள்ளல் (04 புள்ளிகள்)


iv. 1.வளங்கள் ஓரினத் தன்மை வாய்ந்தவையாக இல்லாமை

2.ஒரு கைத்தொழிலில் வளங்களின் வினைத்திறன் மற்றொரு கைத்தொழிலில் சமனாக இருக்காது


3.இரு பொருள் உற்பத்தி தொடர்பிலும் பயன்படுத்தப்படும் தொழில் நுட்பம் வேறுபடல்


4.நீண்ட கால உற்பத்திச் செயற்பாட்டில் குறைந்து செல்லும் அளவுத்திட்ட விளைவுவிதி தொழிற்படல் (04 புள்ளிகள்)


v.அ.




ஆ.



y பொருள்
PPC2
PPC1
0
x பொருள்


Y பொருள்
PPC2
PPC1
0
X பொருள்


Y பொருள்
y
PPC1
PPC2
0
x
x1
X பொருள்

இ.


y பொருள்
A
B
PPC
0
x பொருள்




(04 புள்ளிகள்)

(2)i.1.குறித்த பொருளின் விலை

2.நுகர்வோனின் பணவருமானம்

3.தொடர்புடைய பொருட்களின் விலை

4.நுகர்வோனின் எதிர்பார்க்கைகள்

5.நுகர்வோனின் சுவை

6.ஏனைய காரணிகள் (அரச நடவடிக்கைகள், விளம்பரங்கள்) (04 புள்ளிகள்)

ii. 'ஆம்'

- பண்டமொன்றின் விலைக்கும் அப்பணடத்தின் மீதான நுகர்வுச் செலவீட்டு முறைக்கும் இடையில் எதிரான தொடர்பு காணப்படுமாயின் அது கேள்வி நெகிழ்ச்சியற்ற ஆடம்பரப் பண்டமாக அமையும்.
- பண்டமொன்றின் விலைக்கும் அப்பணடத்தின் மீதான நுகர்வுச் செலவீட்டு முறைக்கும் இடையில் நேரான தொடர்பு காணப்படுமாயின் அது கேள்வி நெகிழ்ச்சியற்ற அத்தியாவசியப் பண்டமாக அமையும்.
- முடிவில் நெகிழ்ச்சியாயின் விலை மாறாத போதும் நுகர்வுச் செலவு மாறும்.
- பூச்சிய நெகிழ்ச்சியின்போது பண்டத்தின் விலைக்கும் நுகர்வுச் செலவுக்கும் இடையில் நேரானதும் விகிதசமமான தொடர்பு காணப்படும். (04 புள்ளிகள்)

iii.1.நிரம்பல் செய்வதற்கான விருப்பத்தைக் கொண்டிருத்தல். இது இலாபத் துண்டலில் ஏற்படும்.

2.நிரம்பல் செய்வதற்கான இயலுமை இது வளங்கள் மற்றும் தொழில்நுட்ப கிடைப்பனவினால் ஏற்படும்.

3. நிரம்பல் திட்டம் (04 புள்ளிகள்)

iv.1.காரணிகளின் அசைவுத் தன்மை

2.பண்டத்தின் தன்மை

3.களஞ்சியப்படுத்தும் ஆற்றல்

4.விலை மாற்றத்திற்க ஏற்ப நிரம்பலை மாற்ற எடுக்கும் காலம்.

5.மேலதிக உற்பத்தி இயலுமை (04 புள்ளிகள்)

v. • நுகர்வோன் பொருளுக்காக செலுத்தத் தயாரான விலைக்கும் சந்தையில் செலுத்திய விலைக்கும்

இடையிலான வேறுபாடு நுகர்வோன் மிகையாகும்.

நுகவோன் மிகை = ஆகக் கூடிய கேள்வி விலை – சமநிலை விலை x சமநிலைத் தொகை

2 (02 புள்ளிகள்)

• உற்பத்தியாளன் பொருள் ஒன்றினை விற்பனை செய்யத் தயாரான விலைக்கும் சந்தையில் விற்பனை

செய்த விலைக்கும் இடையிலான வேறுபாடு உற்பத்தியாளன் மிகையாகும்.

உற்பத்தியாளன் மிகை = சமநிலை விலை – ஆகக் குறைந்த நிரம்பல் விலை x சமநிலைத் தொகை

2 (02 புள்ளிகள்)

(03)

i. Qd = Qs

300 – 4P = -90 + 6P

390 = 10P

390 / 10 = P

**39 = P** ( 01 புள்ளி)

= 300 – 4x39

= 300 – 156

**= 144 அலகுகள்** ( 01 புள்ளி)

ii.நு.மிகை = ( ஆகக் கூடிய கேள்வி விலை - சமநிலை விலை) X சமநிலைத் தொகை / 2 (01 புள்ளி)

= (75 - 39 ) X 144/2 ( 01 புள்ளி)

= **2592/=** ( 01 புள்ளி)

iii. PEd = bxP/Qd

= -4x 39/144

= -1.08 ( 02 புள்ளி)

PEs = bxP/Qs

= 6x 39/ 144

= 1.6 ( 02 புள்ளி)

iv. அ. QSs = -90 + 6(P+5)

= -90 + 6P +30

**= -60 + 6P** ( 02 புள்ளி)

ஆ. Qd = Qs

300 – 4P = -60 + 6P

360 = 10P

360 / 10 = P

**36= P** (01 புள்ளி)

= 300 – 4x36

= 300 – 144

**= 156 அலகுகள்** (01 புள்ளி)

இ. அரசின் மானியச் செலவு = அலகு மானியம் x புதிய சமநிலைத் தொகை

= 5 x 156

=780 ரூபா (02 புள்ளி)

ஈ.மா. பி. உ. மிகை = ( உற்பத்தியாளருக்குக் கிடைக்கும் விலை - ஆகக் குறைந்த நிரம்பல்

விலை) X புதிய சமநிலைத் தொகை /2 (01 புள்ளி)

= ( 41 - 15) X 156 /2 (01 புள்ளி)

= **2028/=** (01 புள்ளி)

உ.மானியம் காரணமாக சமூக நலனில் ஏற்படும் பாதிப்பு யாது?

சமூக நலன் இழப்பு = சமநிலைத் தொகையில் மாற்றம் X அலகு மானியம் / 2

**= 12 X 5 / 2**

**= 30/=** (02 புள்ளி)

(4) i.• ஓரலகு மாறும் உள்ளீட்டிற்கான வெளியீட்டின் அளவுசராசரி உற்பத்தி எனப்படும். AP = TP / L

- ஓரலகு வெளியீட்டிற்கான மாறும் செலவு சராசரி மாறும் செலவு எனப்படும். AVC = TVC / Q
- சராசரி உற்பத்தி வளையியின் தலைகீழ் வடிவம் சராசரி மாறும் செலவு ஆகும்.
- சராசரி உற்பத்தி அதிகரிக்க சராசரி மாறும் செலவு வீழ்ச்சியடையும் சராசரி உற்பத்தி வீழ்ச்சியடைய

சராசரி மாறும் செலவு அதிகரிக்கும். (04 புள்ளிகள்)

ii. நீண்டகால உற்பத்தியில் சகல உள்ளீடுகளையும் மாற்றியமைக்கும் வீதத்தை விட அதிகளவு வீதத்தினால் வெளியீடு அதிகரிப்பது அதிகரிக்கும் அளவுத்திட்ட விளைவாகும்.

1.உற்பத்திக் காரணிகளின் பிரிபடாத் தன்மை

2.முகாமைத்துவச் சிக்கனம்

3.தொழில்நுட்பச் சிக்கனம்

4.வளச்சிக்கனம்

5.ஒரு முறை மட்டும் ஏற்க வேண்டிய செலவுகள்

6.தொழிற் பிரிப்பும் சிறப்புத் தேர்ச்சியும். (04 புள்ளிகள்)

iii.மேலதிக ஓரலகு வெளியீட்டிற்காக ஏற்படும் உற்பத்திச் செலவு எல்லைச் செலவு ஆகும்.

$MC = \Delta TC / \Delta Q$ (02 புள்ளிகள்)

குறைந்து செல்லும் எல்லைவிளைவுகள் காரணமாக குறுங்கால உற்பத்திக்கான எல்லைச் செலவு ஆரம்பத்தில் குறைவடைந்து பின்னர் அதிகரித்துச் செல்கின்ற ஒடுங்கிய U வடிவைப் பெறும்.

(02 புள்ளிகள்)

iv.

| நிறைபோட்டி | தனியுரிமைப் போட்டி |
|---|---|
| 1.ஏராளமான விற்பனையாளர் நுகர்வோர் காணப்படுவார்.<br>2.உற்பத்தி ஓரினத்தன்மை<br>3.பூரண பதிலீட்டைக் கொண்ட உற்பத்திப் பொருட்கள் காணப்படல்<br>4.புரண பிரவேச சுதந்திரம் காணப்படல்<br>5.காரணி அசைவுக்கு தடையில்லை<br>(02 புள்ளிகள்) | 1.தொழிலில் ஏராளமான நிறுவனங்கள் காணப்படும்.<br>2.ஒவ்வொரு நிறுவளமும் வேறுபடுத்தப்பட்ட பண்டங்களை உற்பத்தி செய்யும்<br>3.நெருங்கிய பதிலீட்டைக் கொண்ட உற்பத்திப் பொருட்கள் காணப்படல்<br>4.புரண பிரவேச சுதந்திரம் காணப்படல்<br>5.காரணி அசைவுக்கு தடையில்லை<br>(02 புள்ளிகள்) |

v. அ. Q =TR/ MC

= 45000 / 45

= 1000 (02 புள்ளிகள்)

ஆ. உ.மிகை = TR –TVC

23000 = 45000 - TVC

22000 = TVC

AVC = TVC / Q

= 22000/ 1000

= 22 (02 புள்ளிகள்)

(5)i.**பூரிப்பு நிலைப் புள்ளிப் பண்புகள்:**

1.மெய்உற்பத்தி அதிகரித்து காணப்படும்.

2.முதலீட்டு மட்டம் அதிகரித்துக் காணப்படும்.

3.வேலை வாய்ப்பு அதிகமாக காணப்படும். (02 புள்ளிகள்)

**தாழ்வு நிலைப் புள்ளிப் பண்புகள்:**

1.மெய்உற்பத்தி வீழ்ச்சியடைந்து காணப்படும்.

2.முதலீட்டு மட்டம் வீழ்ச்சியடைந்து காணப்படும்.

3.வேலையின்மை அதிகமாக காணப்படும். (02 புள்ளிகள்)

ii.உற்பத்தி அனுகு முறையின் அடிப்படையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியை மதிப்பீடு செய்யும் போது ஒரு பொருளின் பெறுமதி பல தடவைகள் கூட்டப்படுவதால் உற்பத்தியின் பெறுமதி மிகைக் கணிப்பீட்டிற்கு உட்படும். இவ்வாறு ஒரு பொருள் பல்வேறு தடவைகள் உற்பத்தியில் செர்க்கப்படுவதல் பல்கணிப்பீட்டுப் பிரச்சினை எனப்படுகின்றது.

X நிறுவனம் Y நிறுவனத்திடமிருந்து 1000 மில்லியன் ரூபா பெறுமதியான துணியைக் கொள்வனவு

செய்து 2500 பெறுமதியான புடவையை உற்பத்தி செய்ததாயின் X நிறுவனத்தின் மொத்த வெளியீட்டுப்

பெறுதி 2500 மில்லியன் ரூபாவாகும். இது பல் கணிப்பீட்டிற்கு உட்பட்டதாகும். Y நிறுவனத்தின் உற்பத்திப் பெறுமதி 1000 மில்லியன் ரூபா X நிறுவனத்தின் உற்பத்திப் பெறுமதியில் உள்ளடக்கப்பட்டுள்ளது. X நிறுவனத்தின் வெளியீட்டுப் பெறுமதியில் இருந்து Y நிறுவனத்திடம் கொள்வனவு செய்த இடை நிலை நுகர்வைக் கழிப்பதன் மூலம் பல்கணிப்பீட்டுப் பிரச்சினையைத் தீர்க்கலாம்.

X ன் வெளியீட்டின் பெறுமதி = 2500 MR

Y ன் இடைநிலை நுகர்வு = 1000 MR

∴ X ன் கூட்டிய பெறுமதி = 1500 MR (04 புள்ளிகள்)

iii.1.உற்பத்தி மீதான தேறிய வரிகள்

2.போக்குவரத்துச் செலவு

3.வணிக விளிம்பு (இடைத்தரகர்களின் அறவீடுகள்)

4.நுகர்வோர் செலுத்து வேண்டிய வரிகள். (04 புள்ளிகள்)

iv.அ. AD = C+I+G+(X –M) (02 புள்ளிகள்)

ஆ. $K_T = -b / 1 - b$

$= -0.8 / 1 - 0.8$

$= -0.8 / 0.2$

$= -4$

$K_T = 1 / 1 - b$

$= 1 / 1 - 0.8$

$= 1 / 0.2$

$= 5$ (02 புள்ளிகள்)

இ. Y = C+I+G+NX

$Y = 200 + 0.8 (Y – 200) +500+ 300+ (200 – 100)$

$Y = 1100 + 0.8 Y – 160$

$Y = 940 + 0.8Y$

$Y – 0.8Y = 940$

$0.2Y = 940$

$Y = 940 / 0.2$

$Y = 4700$ B.R (02 புள்ளிகள்)

ஈ.நிறை தொழில் மட்டத்தை அடைய அதிகரிக்க வேண்டிய வருமானம் = 6000 – 4700 = 1300

அதிகரிக்க வேண்டிய முதலீடு =

$\Delta Y = K \times \Delta I$

$1300 = 5 \times \Delta I$

$1300 / 5 = \Delta I \quad \therefore \Delta I = 260$ BR (02 புள்ளிகள்) **உப பிரிவு – ஆ**

06.

(i) அ – மெய்வருமானத்திற்கும் பணத்திற்கான கேள்விக்குமிடையில் நேர்க்கணியத் தொடர்பு காணப்படும். மெய்வருமானம் அதிகரித்தால் பணத்திற்கான கேள்வி அதிகரிக்கும் மாறாக மெய்வருமானம் குறைவடைந்தால் பணத்திற்கான கேள்வி குறைவடையும்.

ஆ – பொதுவிலை மட்டம் அதிகரிக்கும் போது பணத்திற்கான கொள்வனவுச் சக்தி குறைவதனால் பணத்திற்கான கேள்வி அதிகரிக்கும். பொது விலை மட்டத்திற்கும் பணத்திற்கான கேள்விக்கும் இடையில் நேர்க் கணியத் தொடர்பு காணப்படும்.

(ii) விரிந்த பணநிரம்பலுடன் ($m_2$) சீரமைக்கப்பட்ட வெளிநாட்டு நாணய வைப்புக்களின் அளவை (50%) கூட்டவருவது ஒன்றிணைக்கப்பட்ட விரிந்த பணநிரம்பல் ($m_2b$) ஆகும்.

$M_2b = M_2 + TSD_{NRFC} + RD_{FCBU}$

குறித்த காலப்பகுதியில் அரசு மற்றும் வங்கி தவிர்ந்த ஏனைய பொது மக்களிடமுள்ள தாள், உலோக நாணயங்கள்

பொது மக்களின் பெயரில் வணிக வங்கியில் உள்ள கேள்வி, சேமிப்பு மற்றும் தவணை வைப்புக்கள்

வதியாதோர் நாணயக்கணக்கில் உள்ள தவணை, சேமிப்பு வைப்புக்கள்

வெளிநாட்டு நாணய வங்கிப் பிரிவிலுள்ள வதிவுள்ளோர் வைப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கியது.

(iii) கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்

உற்பத்தியாளர் விலைச் சுட்டெண்

மொத்த உள்நாட்டு உற்பத்திச் சுருக்கி

(iv) அ. வைப்பு= 1600 m

ஒதுக்கு = 200 m

ஒதுக்குவீதம் = 10%

$$\frac{10}{100} \times 1600$$

160

சட்டரீதியான ஒதுக்கு = 160 m

மிகை ஒதுக்கு = ஒதுக்கு - சட்டரீதியான ஒதுக்கு

= 200 – 160

= 40

ஆ.

| **சொத்துக்கள்** | **மில்லியன் ரூபா** | **பொறுப்புக்கள்** | **மில்லியன் ரூபா** |
|---|---|---|---|
| வைப்புக்கள் | 1640 | ஒதுக்கு<br>கடன் | 200<br>1440 |
| மொத்தச் சொத்துக்கள் | 1640 | மொத்தப் பொறுப்புக்கள் | 1640 |

(v) பணப்பெருக்கியின் ஊடாக ஒதுக்குப்பணத்துடன் இணைந்து இடைநிலை இலக்காகிய விரிந்த பணத்தின் அளவினை ($m_2$) கட்டுப்படுத்துவதன் மூலம் இறுதி இலக்காகிய விலை உறுதிப்பாட்டினை அடைந்து கொள்ளுதல் நாணய இலக்கிடல் எனப்படும்.

பணக்கொள்கைக்கு வழிகாட்டுவதற்காக கிடைக்கின்ற பிரதான இடைத்தரச் சுட்டெண்ணாக விரிந்த பணநிரம்பல் பயன்படுத்தப்படுகின்றது. இலங்கை மத்திய வங்கி நிகழ்காலத்தில் செயற்பாட்டிலக்காக நிறையளிக்கப்பட்ட அழைப்புப்பண வீதத்தைப் பயன்படுத்துகின்றது.

07

(i) **மேன்மைப் பண்டம்** - தனியார் நன்மையை விட சமூக நன்மை உயர்வாக இருத்தல், நேர்கணிய வெளிவாரி விளைவுடையது.


**மேன்மையற்ற பண்டம்** - சமூக நன்மையை விட தனியார் நன்மை அதிகமானது எதிர்கணிய வெளிவாரி விளைவுடையது.

**பொதுப்பண்டம்** - நுகர்வில் போட்டித்தன்மையற்றது, கொடுப்பனவைச் செலுத்தாதோரை நுகர்வில் இருந்து விலக்கமுடியாது.

**பொது வளம்** - நுகர்வில் போட்டித்தன்மையுடையது, கொடுப்பனவைச் செலுத்தாதோரை நுகர்வில் இருந்து விலக்கமுடியாது.

(ii) உற்பத்தியில் எதிர்க்கணிய வெளிவாரிகள் உள்ள போது உற்பத்திக்கான எல்லை தனியார் செலவைக் காட்டிலும் (MPC) எல்லைச் சமூக செலவு அதிகமாகும்(MSC). இதனால் தனியார் நிரம்பல் கோட்டிற்கு மேலே சமூக நிரம்பல்

கோடு காணப்படும். இதனால் மிகை உற்பத்தி ஏற்படலானது வள ஒதுக்கீட்டுச் செயற்றிறன் இன்மையால் ஏற்படும் சந்தைத் தோல்வியைக் குறிக்கின்றது.




(iii) **அ. பிரதிபலன் தொடர்பான தத்துவம்** - அரசாங்கத்தினால் மக்களுக்கு வழங்கப்படும் சேவையின் அளவுக்கேற்ப மக்கள் அரசாங்கத்திற்கு வரி செலுத்த வேண்டியிருத்தல்.

**ஆ. செலுத்தும் தகுதித் தத்துவம்** - ஒவ்வொரு தனிநபரினதும் வரி செலுத்தும் சக்திக்கேற்ப வரி அறவிடப்படல் வேண்டும் என்பதாகும்.

(iv) பொருட்கள் சேவைகள் மீதான செலவீடு
வட்டிச் செலுத்தல்கள்
மாற்றல்கள்

(v) பொருளாதார வளர்ச்சியையும் அபிவிருத்தியையும் அதிகரித்தல்
நிறைதொழில் மட்டம்
விலை உறுதிப்பாடு
வர்த்தக சகடோட்ட தளம்பல்களை கட்டுப்படுத்தல்
சென்மதிநிலுவைப் பிரச்சினைகளைக் குறைத்தல்
வருமானம், செல்வப்பரம்பலின் ஏற்றத்தாழ்வைக் குறைத்தல்
வளப்பகிர்வினை வினைத்திறனாக்குதல்
மொத்தக் கேள்வி மற்றும் மொத்த நிரம்பலில் தாக்கம் செலுத்துதல்

08.

(i) இரு நாடுகள் காணப்படும் நிலையில் பொருளொன்றின் உற்பத்தியில் முதலாவது நாடு இரண்டாவது நாட்டை விட அதிகளவு வெளியீட்டை தரப்பட்டுள்ள உள்ளீடுகளைப் பயன்படுத்தி உற்பத்தி செய்ய முடியுமாயின் குறித்த முதலாவது நாடு குறித்த பொருளுற்பத்தியில் இரண்டாவது நாட்டை விட முழு நன்மையை கொண்டுள்ளது எனலாம்.

பொருளொன்றின் உற்பத்தியில் குறித்த ஒரு நாடு மற்றைய நாட்டை விடக் குறைவான அமையச் செலவினைக் கொண்டிருக்குமாயின் அந் நாடு குறித்த பொருள் தொடர்பில் ஒப்பீட்டு நன்மையைக் கொண்டிருக்கும்

(ii)


அ.

| நாடு | வானொலி | கணினி |
|---|---|---|
| இந்தியா | 10/4 = 2.5 | 4/10= 0.4 |
| சீனா | 5/1= 5 | 1/5= 0.2 |


வானொலி உற்பத்தியில் ஒப்பீட்டு நலன் காணப்படுவது இந்தியாவிற்காகும். காரணம் வானொலி உற்பத்திக்கான அமையச் செலவு ஒப்பீட்டளவில் குறைவாகும்.

கணினி உற்பத்தியில் ஒப்பிட்டு நன்மை காணப்படுவது சீனாவுக்காகும். காரணம் சீனாவில் கணினி உற்பத்திக்கான அமையச் செலவு ஒப்பீட்டு ரீதியில் குறைவாகும்.

ஆ.




இந்தியா




சீனா

இந்தியா வானொலிப் பெட்டி உற்பத்தியில் சிறப்புத் தேர்ச்சியை ஏற்படுத்திக் கொள்கின்றது. பூரண சிறப்புத் தேர்ச்சி அடிப்படையில் இந்தியா A என்ற உற்பத்திச் சேர்க்கையை உற்பத்தி செய்யும்.

சீனா கணினி உற்பத்தியில் சிறப்புத் தேர்ச்சியைப் பெற்றுக் கொள்கிறது. பூரண சிறப்புத் தேர்ச்சி அடிப்படையில் சீனா B என்ற உற்பத்திச் சேர்க்கையில் உற்பத்தி செய்யும்.

இ.

வானொலிப் பெட்டி உற்பத்தியில் சிறப்புத் தேர்ச்சியைப் பெற்ற இந்தியா 100 வானொலிகளை ஏற்றுமதி செய்து 400 கணினிகளை இறக்குமதி செய்யும்போது நுகர்வுச் சேர்க்கை A1 வரை நகர்கின்றது. அதன்படி இந்தியாவின் நுகர்வுச் சாத்திய எல்லை உற்பத்தி சாத்திய எல்லையிலிருந்து வலப்பக்கமாக நகர்கின்றது.

கணினி உற்பத்தியில் சிறப்புத்தேர்ச்சியைப் பெற்ற சீனா 400 கணினிகளை ஏற்றுமதி செய்து 100 வானொலிகளை இறக்குமதி செய்கிறது. அப்போது நுகர்வுச் சேர்க்கை B1 வரை நகர்கின்றது. இதன்படி சீனாவின் நுகர்வுச் சாத்திய எல்லை உற்பத்தி சாத்திய எல்லையிலிருந்து வலப்பக்கமாக நகர்கின்றது.

ஈ.

இந்தியா ஒரு வானொலியை ஏற்றுமதி செய்து சீனாவில் இருந்து இறக்குமதி செய்யும் கணினிகளின் தொகை 2.5 ற்கும் 5 ற்கும் இடையில் அமைய வேண்டும்.

சீனா கணினி ஒன்றை ஏற்றுமதி செய்து இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யும் வானொலிகளின் தொகை 0.2 ற்கும் 0.4 ற்கும் இடையில் அமைய வேண்டும்.

(iii)

- காரணி கிடைப்பனவுத்தன்மை
- உற்பத்தித்திறன் வேறுபாடுகள்
- அளவுத்திட்டச்சிக்கனங்கள்
- தொழினுட்ப மாற்றங்களும் புத்தாக்கங்களும்
- இட அமைவு
- உற்பத்திப் பொருளின் வாழ்கை வட்டம்
- நுகர்வோர் விருப்பத்தேர்வுகள்
- ஆரசாங்கக் கொள்கைகள்

(iv)

**நிலையான வெளிநாட்டு நாணயமாற்று விகிதத்தின் நன்மைகள்**

- அடிக்கடி நாணயமாற்று விகிதம் தளம்பல் அடையும் அபாயம் நீங்கப்படுவதால் சர்வதேச வர்த்தகம் ஊக்குவிக்கப்படும்
- ஏற்றுமதிகளின் போட்டித் தன்மையை பாதுகாத்துக் கொள்வதற்காக உற்பத் திச்செலவை ஒப்பீட்டு ரீதியில் குறைந்த மட்டத்தில் பேணிக் கொள்வதற்கு இதனால் வற்புறுத்தப்படுவதனால் உள்நாட்டுப் பொருளாதார முகாமைத்துவம் தொடர்பாக இறுக்கமான ஒழுங்கொன்று ஏற்படும்.
- சர்வதேச மூலதன முதலீடுகள் மற்றும் கடன் நிதிகள் என்பவற்றைப் பரிமாறிக் கொள்வதற்குச் சாதகமான நிலை ஏற்படும்.
- நாணயமாற்று விகிதத்தின் எதிர்பார்க்கப்பட்ட மாற்றங்களை அடிப்படையாகக் கொண்ட உத்தேச நடவடிக்கைகள் நடைபெற மாட்டாது

**நிலையான வெளிநாட்டு நாணயமாற்று விகிதத்தின் தீமைகள்**

- வெளிவாரி சமநிலைக்காக உள்நாட்டு சமநிலையைத் தியாகம் செய்யவேண்டி ஏற்படும்.
- நிலையான நாணயமாற்று விகிதத்தினுள் மிகை அல்லது குறைக் கணிப்பீடுகள் ஏற்படுமாயின் நிரந்தரமான சென்மதி நிலுவை சமமின்மைக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்படல்.
- நிலையான நாணயமாற்று விகிதத்தினைப் பேணுவதற்கு நாணய அதிகாரிகளுக்கு வெளிநாட்டு செலவாணியில் பெருமளவான ஒதுக்கொன்றை பேணவேண்டி ஏற்படல்
- போதியளவான வெளிநாட்டு செலாவணி ஒதுக்கொன்று நாணய அதிகாரிகளிடம் இல்லாத சந்தர்ப்பத்தில் சென்மதி நிலுவைப் பற்றாக்குறை காணப்படுமாயின் கடுமையான பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பின்பற்ற வேண்டிஏற்படல் மற்றும் அதனால் சமூக நலனுக்குப் பாதிப்பு ஏற்படல்

09.

(i) பொருளாதார வளர்ச்சி என்பது காலப்போக்கில் தேசிய வெளியீடு மற்றும் வருமான மட்டங்களில் அதிகரிப்பினை ஏற்படுத்தக்கூடிய வகையில் பொருளாதாரத்தின் உற்பத்தி இயலளவில் நிலையான அதிகரிப்பை ஏற்படுத்தும் செயன்முறையாகும்.

பிரதான மூலாதாரங்கள்

- வளத்திரட்சியில் ஏற்படும் அதிகரிப்பு (பௌதீக மூலதனம், இயற்கை மூலதனம், மனித மூலதனம், சமூக மூலதனம்)
- உற்பத்தித்திறன் அதிகரிப்பு (தொழில்நுட்ப விருத்தி, புத்தாக்கங்கள், ஆய்வு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளின் அதிகரிப்பு
- பொருளாதார உறுதிப்பாடு
- முயற்சியாண்மை திறன் விருத்தி
- ஊக்குவிப்புக்கள்
- நல்லாட்சி
- வர்த்தக சுதந்திரம், முதலீடு திறந்து விடப்படல்

(ii)

- உட்கட்டமைப்பு வசதிகளை விரிவாக்குதல்
- மனித மூலதன விருத்திக்கான முதலீடுகளை மேற்கொள்ளல்
- ஆய்வு மற்றும் அபிவிருத்தித்துறைகளை மேம்படுத்தல்
- நேரடி வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவித்தல்
- பொருளாதார உறுதிப்பாட்டை ஏற்படுத்தல்
- அரச தனியார் பங்குடமைகளை ஊக்குவித்தல்
- நல்லாட்சி மூலம் வெளிநாட்டு நன்மதிப்புக்களை பெற்றுக்கொள்ளல்

(iii)

வருமானப்பரம்பல் ஏற்றத்தாழ்வுகள்

- லோரன்ஸ் வளையி
- கினிக்குணகம்
- ஐயணை பரவல் விகிதம்

முதலானவற்றைப் பயன்படுத்தி அளவிடப்படுகின்றது.

வறுமை

- தேசிய வறுமை கோடு
- சர்வதேச வறுமை கோடு
- தலைக்குரிய வறுமைச் சுட்டெண்
- வறுமை இடைவெளிச் சுட்டெண்
- பல்பரிமாண வறுமைச் சுட்டெண்
  போன்ற நியதிகளைப் பயன்படுத்தி அளவிடப்படுகின்றது

(iv)

- பெண்கள் எல்லாவிதமான வேலைகளையும் செய்ய முன்வராமை
- பெண்கள் தூர இடங்களுக்குச் சென்று வேலைசெய்ய விரும்பாமை
- பெண்கள் அதிகரித்த குடும்பப்பொறுப்புச் சுமையை ஏற்றுள்ளமை
- சமூகக் கட்டுப்பாடுகள், விழுமியங்கள் தீவிரமாகப் பின்பற்றப்படுகின்றமை
- தொழில்வாய்ப்புக்களை வழங்குவது தொடர்பில் காணப்படும் பாரபட்சம்

- பெண்களுக்கு ஏற்ற தொழில்வாய்ப்புக்களை உருவாக்குவதில் காணப்படும் பலவீனங்கள்

10

(i)

- உயர்மட்டத்தில் காணப்படும் பாதீட்டுப்பற்றாக்குறை
- அரச கடன்சுமை தொடர்ச்சியாக உயர்மட்டத்தில் காணப்படுதல்
- வர்த்தக நிலுவைப்பற்றாக்குறை விரிவடைந்து செல்லல்
- நிச்சயமற்ற பொருளாதாரக் கொள்கை
- உள்நாட்டுச் சேமிப்புக்கள் குறைந்த மட்டத்தில் காணப்படல்
- அடிக்கட்டுமானங்களின் குறைபாடு

(ii)

**சவால்கள்**

- உல்லாசப்பயண கைத்தொழில் தொடர்பான பயிற்சி பெற்ற தொழிலாளர் பற்றாக்குறை
- உல்லாசப்பயணிகளுக்கான விடுதிகள் மற்றும் விடுதி அறைகளின் பற்றாக்குறை
- உல்லாசப் பயணக் கைத்தொழிலின் பாதுகாப்பும் நல்லொழுக்கமும் அதிகரிக்கப்படவேண்டிய நிலை காணப்படல்
- உல்லாசப் பயணிகள் தங்கியிருக்கும் நாட்களின் எண்ணிக்கையினை அதிகரிப்பதற்கு விசேட கொள்கைத் திட்டங்களை மேற்கொள்ளவேண்டியிருத்தல்
- உல்லாசப் பயணத்தொழிலுடன் தொடர்புடைய எல்லாப் பிரச்சினைகளையும் மேற்பார்வை செய்யக்கூடிய அரச கட்டமைப்புத் தேவைப்படல்.

**விருத்திக்கான சிபாரிசுகள்**

- பிரதான போக்குவரத்து மையங்களில் சுற்றுலா தகவல் நிலையங்களை அதிகரித்தல்
- சிறந்த வீதிப் பாதுகாப்பு முறை, உரிய கழிவகற்றல் பழக்கவழக்கங்களின் விருத்தி
- உபச்சாரத்திற்கான சமூக உருமாற்றம்
- சுற்றுலாத்துறையில் முதலிடுவதற்கான புதிய முதலீட்டாளர்களை கவர்வது அவசியம்

(iii)

- வெளிநாட்டு முதலீட்டை ஊக்குவித்தல்
- ஊழியச்சந்தையில் இறுக்கத்தன்மையை நீக்குதல்
- சக்திவளமூலத்தை பன்முகப்படுத்தலும், விரிவாக்கலும்
- அரசாங்கம் வரி ஊக்குவிப்புக்களை வழங்குதல்
- பொது உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்தல்
- ஏற்றுமதி நோக்கிய கைத்தொழில் மயமாக்கலை ஊக்குவித்தல்
- நவீன தொழில்நுட்ப வசதிகளை மேம்படுத்த நடவடிக்கை எடுத்தல்

(iv)

- இலங்கையில் பொருளாதார வளர்ச்சி குறைந்த மட்டத்தில் காணப்படுதல்
- மனித மூலதனத்திரட்சி குறைவாக இருத்தல்
- ஆராய்ச்சி அபிவிருத்தி மீது மேற்கொள்ளும் செலவுகள் குறைவாக இருத்தல்
- இலங்கையில் நிலவும் குறைந்த தேர்ச்சி மட்டம், குறைந்த சம்பள மட்டம், என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்மயமாக்கச் செயற்பாடு

காரணமாக அறிவை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார வளர்ச்சிச் செயற்பாட்டை நோக்கிச் செல்லும் நிலை குறைந்துள்ளது.

- இலங்கைக்கு வெளிநாடுகளிலிருந்து கிடைத்த நன்கொடை உதவிகள் மட்டுப்படுத்தப்பட்டன.
- கல்வி, பயிற்சி, ஆராய்ச்சி, அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான முதலீடுகளில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.
- நேரடி வெளிநாட்டு முதலீடுகளானது குறைந்த தொழில்நுட்பத்துடன் ஊழியச் செறிவான தொழில்களை நோக்கி அதிகளவில் உட்பாய்ச்சல் ஏற்படுவதனால் மனித மூலதனத்தை உயர்த்துவதற்கான வாய்ப்புக்கள் குறைவாக இருத்தல்.